OS.No.613/2023 – 26.3.2025

PW1 – சக்திசபரி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் 1ம் பிரதிவாதியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் கண்ட மனை நிலங்கள் அங்கீகாரம் பெற்ற நிலமா இல்லையா என்றால் அங்கீகாரம் பெற்ற நிலங்கள் இல்லை. ஸ்ரீ ஆஞ்சநேயர் நகர் என்ற பெயரில் 38 மனை நிலங்களில் 20.10.2016க்கு முன்னர் 33 சதவிகித மனைநிலங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

அங்கீகாரம் இல்லாத மனை நிலத்தை பதிவு செய்யக்கூடாதென்று பதிவுத்துறைக்கு உத்தரவு பிறப்பித்த பின்னர் வழக்கு தாக்கல் செய்யும் வரை மேற்படி மனை நிலங்களுக்கு அங்கீகாரம் பெற நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

பொம்மிடி காவல்நிலையத்தில் யார் புகார் கொடுத்தது என்றால் நான்தான் புகார் கொடுத்தேன். அப்போது 1ம் பிரதிவாதியின் மகனை காவல்நிலையத்தில் அழைத்து விசாரித்தபோது கோர்ட் மூலமாக பார்த்துக்கொள்ளுங்கள் என்று காவல் ஆய்வாளர் கூறினார். நான் இவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் மகன் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு

அழைத்தபோது நானும் 1ம் பிரதிவாதியின் மகனும் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திய பத்திர எழுத்தரிடம் சென்று விசாரித்தபோது மேற்படி சார் பதிவாளர் அலுவலக்தில் அங்கீகரிக்கப்பட்ட மனை நிலம் இல்லாததால் விற்பனை செய்ய முடியாது என்பதால் சார் பதிவாளர் விற்பனை செய்ய ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

பின்னிட்டு நான் 1ம் பிரதிவாதியின் மகனிடம் சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து நோட்டிஸ் 1ம் பிரதிவாதிக்கு வரும் என்றும் அதை வாங்க வேண்டாம் என்று நான் சொன்னேன் என்றால் சரியல்ல.

10.02.2014ம் தேதி ஏற்படுத்திக்கொண்ட கிரய ஒப்பந்த ஆவணத்தின் மூல ஆவணங்களான அசல் ஆவணங்கள் 463/2014 மற்றும் 464/2014 அசல் ஆவணங்களை 1ம் பிரதிவாதியிடம் கொடுத்துள்ளேன் என்றால் 463/2014 ஆவணத்தை கொடுத்தேன். 464/2014 ஆவணம் குறித்து ஞாபகமில்லை.

கிரய ஒப்பந்த பத்திரத்தை ஏற்படுத்தியபோது ரூ.10,00,000/− ஒப்பந்த ஆவணத்தின்படி மீதி ரூ.10,00,000/−க்கு கடனுறுதி சீட்டை எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 463/2014 ஐ ரூ.15,00,000/−க்கு விலை பேசி ரூ.10,00,000/− அட்வான்ஸ் வாங்கினேன்.

2015ம் வருடம் மே மாதம் 6ம் தேதி நான் 1ம் பிரதிவாதிக்கு நான் புரோநோட் எழுதி கொடுத்தேன் என்றும் அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றால் சரியல்ல. நான் பொய்யான காரணங்களை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் முறையாக மேற்படி மனை நிலத்தை அங்கீகாரம் பெற்று 1ம் பிரதிவாதிக்கு கிரய விற்பனை நிறைவேற்ற கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் புரோக்கர் மூலமாக அவரை தெரியும். பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எனவே வழக்கு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/– S.Sumathy,

Principal District Judge, Salem.